**தலைப்பு 20 – தேர்தல்கள் ஆணைக்குழு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

தேர்தல்கள் ஆணைக்குழுவின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 28 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 24 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேர்தல்கள் ஆணைக்குழுவின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

  எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ)பிரிவின் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) தேர்தல்கள் ஆணைக்குழுவினால் முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) தேர்தல்கள் ஆணைக்குழுவினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை**

2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அத்தேவைப்பாட்டிலிருந்து விலகியிருந்த சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதியல்லாத சொத்துக்கள் அறிக்கையிடும் போது அச்சொத்துக்களுக்குரிய பிரதான பேரேட்டு மீதிகள் பெறுமதியுடன் தனிப்பட்ட சொத்துக்களின் பெறுமதி பரீட்சிக்கப்பட்டு அப்பெறுமதிகள் ஒப்பிடப்பட்டிருக்கவில்லை. | மேற்படி சுற்றறிக்கையின் பிகாரம் நிதியல்லாத சொத்துக்கள் அறிக்கையிடும் போது அச் சொத்துக் களுக்குரிய பிரதான பேரேட்டு மீதிகள் பெறுமதியுடன் தனிப்பட்ட சொத்துக்களின் பெறுமதி பரீட்சிக்கப்பட்டு அப்பெறுமதிகள் இணங்குவதாக உறுதிப்படுத்தப்பட வேண்டும். | அவதானிப்புடன் இணங்குகின்றேன். 2019 ஆம் ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |
| (ஆ) | நிறுவனத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதி நிலைமை தொடர்பான கூற்றில் தேறிய சொத்துக்களுக்காக, ஆதனங்கள், பொறிகள் உபகரணங்கள் என்பவற்றின் பெறுமதி காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | மேற்படி சுற்றறிக்கையின் 7(V) பந்தியின் பிரகாரம் நிதி நிலைமைக் கூற்றில் தேறிய சொத்துக்கள் ஆணைக்குழுவிடமிருந்த முற்பணக் கணக்கு பெறுமதியிலிருந்து வைப்புக்கணக்கு பெறுமதி கழிக்கப்பட்டதன் பின்னர் தேறிய சொத்துக்கள் கணக்கிடப்பட்டிருந்தது. | - மேற்படி - |

### 1.6.2 நிதி நிலைமை தொடர்பான கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2018 ஆம் ஆண்டில் மட்டக்களப்பு மாவட்ட புதிய உத்தியோகபூர்வ விடுதி நிர்மாணம் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் அதற்காக செலவிடப்பட்டுள்ள ரூபா 3,949,288 பெறுமதி, கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களின் கீழ் 2018 திசெம்பர் 31 இல் மூலதனமாக்கப்பட்டு இறுதி நிதிநிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | பூர்த்தி செய்யப்படாத மட்டக்களப்பு மாவட்ட புதிய உத்தியோகபூர்வ விடுதிக்காக செலவிடப்பட்டுள்ள ரூபா 3,949,288 பெறுமதி நடைமுறை வேலை என்ற நிரலில் பதிவு செய்யப்பட வேண்டும். | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | மீளாய்வாண்டில் கைதவிர்க்கப்பட்ட 02 வாகனங்களின் கிரயமான ரூபா 2,953,281 பெறுமதி வாகனங்களின் கிரயத்திலிருந்து அகற்றப்பட வேண்டிய போதிலும் அவ்வாகனங்களின் விற்பனை பெறுமதி கைதவிர்ப்பின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | கைதவிர்க்கப்பட்ட வாகனங்களின் கிரயம் வாகனங்களின் பெறுமதியிலிருந்து அகற்றப்பட வேண்டும். | -மேற்படி- |
| (iv) | மீளாய்வாண்டில் வாகனமொன்று கைதவிர்ப்பு செய்யப்பட்டிருந்ததுடன் அதன் ரூபா 7,500,000 ஆன கிரயம் தொடர்பாக எவ்வித பதிவொன்றும் 2018 ஆம் ஆண்டின் நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | கைதவிர்க்கப்பட்ட, அகற்றப்பட்ட வாகனங்களின் கிரயம் நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் வாகனங்களின் கிரயத்திலிருந்து அகற்றப்பட வேண்டும். | -மேற்படி- |
| (iv) | மீளாய்வாண்டின் போது மாவட்ட அலுவலகங்களினால் கைதவிர்க்கப்பட்ட அலுவலக உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் மற்றும் இயந்திரங்களின் கிரயம் ரூபா 4,369,874 தொகை நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் கைதவிர்ப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டின் போது நிறுவனத்தினால் கைதவிர்க்கப்பட்ட மொத்தச் சொத்துக்களின் கிரயம் நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் கைதவிர்ப்பின் கீழ் காண்பிக்க வேண்டும். | -மேற்படி- |

**1.6.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 உள்ளூராட்சி மன்ற வாக்கெடுப்புக்குரிய கண்டி மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தினால் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட வாகனங்களுக்காக ரூபா 1,631,617 ஆன கொடுக்கல் வாங்கலுக்குரிய போக்குவரத்து குழு தகவல்கள் அலுவலகத்திற்கு கையளிக்கப்படாத காரணத்தினால் அதனை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | வாக்கெடுப்பு முடிவடைந்ததன் பின்னர் போக்குவரத்துக் குழு தகவல்கள் தேர்தல்கள் அலுவலகத்திற்கு கையளிக்கப்பட வேண்டும். | போக்குவரத்து குழு விலை குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டதாக குறிப்பிடப்பட்ட வாகனங்களை விட குறைந்த அளவிலான வாகனங்களுக்கே கொடுப்பனவு செய்யப் பட்டுள்ளதுடன் குறித்த அறிக்கையை சமர்ப்பிக்குமாறு போக்குவரத்து குழுவிற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. |

**1.6.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | | | |
| xxiv ஆம் அத்தியாயத்தில் 4.4 ஆம் பந்தி | 2018 சனவரி 03 ஆந் திகதி மரணித்த உத்தியோகத்தரிட மிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 158,030 ஆன தொகையை தீர்வு செய்வதற்கு 2019 மார்ச் 05 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | மரணித்த உத்தியோகத்த ரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதியை தீர்வு செய்வதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மரண பணிக்கொடை வழங்கும் சந்தர்ப்பத்தில் அறவிடுவதற்காக குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்- | | | |
| நிதிப்பிரமாணம் 106 | மீளாய்வாண்டில் 25 எரிபொருள் கட்டளை புத்தகங்கள் காணாமல் போனமை தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க | நிதிப்பிரமாணம் 106 இன் பிரகாரம் பற்றாக்குறை முறையற்ற பயன்பாடு அல்லது வேறொரு விடயமொன்றாக இருக்கும் போது | அவதானிப்புடன் இணங்குகின்றேன். ஆரம்ப பரிசோதனை அறிக்கை கிடைத்துள்ளது. அதன் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வில்லை. | காணாமல் போன பொருட் கொள்வனவின் பெறுமதி உடனடியாக மீள்நிரப்பப்பட வேண்டும். | எடுக்கப்படும். |
| (iii) | நி.பி 104(4) | 2018 நவம்பர் 23 ஆந் திகதி கெப் வண்டிற்கு ஏற்பட்ட நட்டம் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் அச்சேதம் தொடர்பாக முழுமையான அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது வாகனத்தின் நட்டம் மதிப்பீடு செய்யப்படாத காரணத்தினால் உள்ளடக்கப்படவில்லை. 2019 ஆம் ஆண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |
| (iv) | நிதிப்பிரமாணம் 137 | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் கொடுப்பனவு செய்யும் போது உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் உடன்படிக்கை செய்யப்பட்ட ஒப்பந்த விலையான ரூபா 721,215 இனை மிகைத்து ரூபா 130,936 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 137(3) மற்றும் (4) இன் படி உடன்படிக்கையின் பிரகாரம் பிரகாரம் கொடுப்பனவு அங்கீகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். | ஒப்பந்தத்திற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு கருத்திற் கொண்டு கொடுப்பனவு செய்யப்பட்டது. அடுத்த ஒப்பந்த செயற்பாடுகளின் போது இவ்வாறான விலகளுக்கான பெறுகை குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (v) | நிதிப்பிரமாணம் 104 | மீளாய்வாண்டின் போது கண்டி தேர்தல்கள் அலுவலகத்திலிருந்து காணாமல் போன ரூபா 59.220 ஆன 56 சார்ஜ் மின் விளக்குகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் ஏற்பட்ட நட்டத்தின் அளவு மற்றும் காரணங்கள் என்பவற்றை அறிந்கொள்வதற்கு பரிசோதனை முழு அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கண்டி தேர்தல்கள் அலுவலகத்திலிருந்து காணாமல் போன சார்ஜ் மின் விளக்குகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ள பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iv) | நிதிப்பிரமாணம் 264 | நிறுவனத்தினால் ரூபா 1,009,656 பெறுமதியான 06 கொடுக்கல் வாங்கல்களுக்காக கொடுப்பனவு செய்யும் போது உறுதிச்சீட்டில் குறிப்பிடப்பட்ட மொத்த | நிதிப்பிரமாணம் 264 இன் பிரகாரம் ஒவ்வொரு கொடுப்பனவும் உறுதிச்சீட்டில் குறிப்பிடப்பட்ட மொத்த பணத்தையும் பெற்றுக் | அவதானிப்புடன் இணங்குகின்றேன். பற்றுச்சீட்டினை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பணத்தையும் பெற்றுக் கொண்டதாக பெறுவோனிடம் பெற்றுக் கொண்ட, தேவையெனின் உரிய வகையில் முத்திரை ஒட்டி பற்றுச்சீட்டு மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கொண்டதாக பெறுவோனிடம் பெற்றுக் கொண்ட தேவையெனின் உரிய வகையில் முத்திரை ஒட்டி பற்றுச்சீட்டு மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | |
| (iv) | நிதிப்பிரமாணம் 177(1) | கொழும்பு மாநகர மற்றும் மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தினால் நாளாந்தம் கிடைக்கும் பணத்தை நாளாந்தம் வங்கியிலிடப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணம் 177(1) இன் பிரகாரம் அரசின் வருமானத்தின் பகுதியொன்றாக அல்லாவிடில் தமக்கு கிடைக்கும் மொத்த பணத்தையும் இயலுமான வரை கணக்கில் வைப்புச் செய்து அத்தொகைக் கான பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்வது அரசிற்காக கிடைக்கும் எந்தவொரு பணமாக இருப்பினும் கிடைக்கும் சேகரிக்கும் உத்தியோகத்தரின் கடமையாகும் | உள்ளூராட்சி வாக்கெடுப்பின் போது குறித்த அதிகளவிலான கடமைகள் மற்றும் குறித்த உத்தியோகத்தர் லீவில் இருந்த சந்தர்ப்பத்தில் வங்கியில் வைப்புச் செய்வதில் தாமதமொன்று ஏற்பட்டிருந்தது. சீராக்கு வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (viii) | <u>அரச நிதிச் சுற்றறிக்கை</u><br>2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 9(அ) பந்தி | தீர்வையற்ற வரியில் இறக்குமதி செய்யப்பட்ட வாகனமொன்றை கைதவிர்ப்பு செய்யும் போது அத்தீர்வை வரி நிபந்தனைகள் உரிய வகையில் இரத்துச் செய்யப்படாமல் கை தவிர்ப்பிற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் தீர்வை வரி நிபந்தனைகள் உரிய வகையில் இரத்துச் செய்யப்பட்டதன் பின்னர் மாத்திரம் குறித்த வாகனங்களை கைதவிர்ப்பதற்காக உட்படுத்த வேண்டும். | கைதவிரப்பு செயற்பாடு ஆரம்பமாவதற்கு முன்னர் இது தொடர்பாக தெளிவான விளக்கமொன்று காணப்படவில்லை. 2019 ஆம் ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ix) | உள்ளூராட்சி மன்றங்களுக்கான வாக்கெடுப்பு கட்டளைச் சட்டம் | 2018 உள்ளூராட்சி வாக்கெடுப்பின் போது 18 பிரதேச சபைக்குரிய அபேட்சகர்கள் வைப்புச் செய்திருந்த ரூபா 934,500 ஆன பிணை பணத்தை விடுத்திருக்கவில்லை. | உள்ளூராட்சி வாக்கெடுப்பு கட்டளை சட்டத்தின் (262 அதிகாரம்) (4) 29 ஆம் பிரிவில் பிரகாரம் அபேட்சகர் ஒருவர் போட்டியிட்ட வட்டாரமொன்றில் எடுக்கப்படும் மொத்த வாக்குகள் எண்ணிக்கையில் இருபதுக்கு ஒன்றினை மிகைக்கும் | 2018 திசெம்பர் 07 ஆந் திகதிக்கு முன்னர் பிணை வைப்புக்களை பணத்தை விடுவிப்பதற்கு விண்ணப்பிக்காத அபேட்சகர்களின் பிணைப் பணத்தை அரச வருமானத்திற்கு செலவு வைப்பதாக அபேட்சகர்களுக்கு 2018 நவம்பர் 29 ஆந் திகதிய அறிவிக்கப்பட்டுள்ளது. 02 ஆண்டுகள் |

| | | | |
|---|---|---|---|
| | | சந்தர்ப்பத்தில் அந்த அபேட்சகருக்கு அப்பணத்தை வாக்கெடுப்பின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டதன் பின்னர் உடனடியாக மீள வழங்கப்பட வேண்டும். | முடிவடைந்ததன் பின்னர் அரசின் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (x) ஏனைய சுற்றறிக்கை | | | |
| 2017 நவம்பர் 21 ஆந் திகதி வழங்கப்பட்ட S/7(1) ஆம் இலக்க உள்ளக சுற்றறிக்கை | கண்டி மாவட்ட தேர்தல் அலுவலகத்தினால் ரூபா 2.69 மில்லியன் பெறுமதியான 2540 சார்ஜ் மின்குமிழ்கள் கொள்வனவின் போது உரிய அதிகாரத்தை பெற்றுக் கொண்டிருக்க வில்லை. | பெறுகை ரூபா 1.5 மில்லியனை மிகைக்கும் சந்தர்ப்பத்தில் ஆணைக்குழு பெறுகை குழுவின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். | தலைமை அலுவலகத்தினால் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகள் மற்றும் பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை தொடர்பாக உரிய உத்தியோகத்தர் களிடமிருருந்து காரணங்கள் கோரப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 07 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக மிகை நிதி மேற்கொள்ளப்பட்ட தால் அச்செலவின விடயங்களில் நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்ட தன் பின்னர் சேமிப்புக்கள் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடுகளின் 15 சதவீதம் முதல் 37 சதவீதம் வரையான அளவினைக் கொண்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் நிறைவேற்றப்படும் வகையில் வருடாந்த செலவின மதிப்பீட்டின் பிரகாரம் செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | இயலுமானவரை நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. அவதானிப்புடன் இணங்குகின்றேன் |
| (ஆ) | 2 மூலதன செலவின விடயங்களுக்காக மிகை நிதி மேற்கொள்ளப் | நிதிப்பிரமாணம் 50 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் நிறைவேற்றப்படும் | இயலுமானவரை நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| பட்டதால் அச்செலவின விடயங்களில் நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்புக்கள் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடுகளில் 92 சதவீதம் முதல் 94 சதவீதம் வரையான அளவினைக் கொண்டிருந்தது. | வகையில் வருடாந்த செலவின மதிப்பீட்டின் பிரகாரம் செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | அவதானிப்புடன் இணங்குகின்றேன் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் ஆணைக்குழுவினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட 2018 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் ஆண்டிற்குரிய நாளது வரையாக்கப்பட்ட நிறுவனத்தின் ஒழுங்கமைப்பு கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் தற்போது சேவையிலுள்ள பதவியணியினர், வருடாந்த கட்டுநிதி தேவைப்பாட்டுத் திட்டம், வருடாந்த பெறுகைத் திட்டம் மற்றும் உள்ளக கணக்காய்வுத் திட்டம் என்பன உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.2 செயற்பாடுகளை நிறைவேற்றாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ஆணைக்குழுவின் நிர்வாகப் பிரிவினால் இரத்தினபுரி மாவட்ட தேர்தல் அலுவலகத்தின் சுவர் அலுமாரி பொருத்துதல் மற்றும் அலுமினியம் பகுதிகள் இட்டு பகுதிகளாக்க திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அச்செயற்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | மீளாய்வாண்டின் போது கட்டிடத் திணைக்களத்திற்கு முற்பணம் செலுத்த முடியாமல் இருந்த காரணத்தினால் இச்செயற்பாடு 2019 ஆம் ஆண்டிற்கு கொண்டு செல்லப்பட்டது. |

| | | |
|---|---|---|
| (ஆ) ஆணைக்குழுவின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் நிறைவேற்றப்பட வேண்டிய 06 செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | 02 பிரதான செயற்பாடுகளுக்குரிய 06 உப செயற்பாடுகள் நிறைவேற்றப் படாதிருந்ததுடன் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் செயன் முன்னேற்ற அறிக்கைக்கு தகவல் உள்ளடக்குவதில் தவறு காரணமாக இவ்வாறு அறிக்கையிடப்பட்டிருந்தது. எதிர்வரும் ஆண்டில் செயன் முன்னேற்ற அறிக்கையை சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.3 எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டங்களை அமையாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ஆணைக்குழுவின் தகவல் தொழில்நுட்ப பிரிவினால் நிறைவேற்றப்பட வேண்டிய 03 செயற்பாடுகள் மீளாய்வாண்டில் நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும் அவை எதிர்பார்க்கப்பட்ட நிறைவு மட்டத்தை பெற்றிருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஒரு செயற்பாடு ஆணைக் குழுவின் அறிவுறுத்தலின் பேரில் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. ஏனைய செயற்பாடுகள் துரிதமாக நிறைவேற்ற அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |
| (ஆ) ஆணைக்குழுவின் பெறுகை பிரிவினால் நிறைவேற்றப்பட வேண்டிய 03 செயற்பாடுகள் மீளாய்வாண்டில் நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும் அவை எதிர்பார்க்கப்பட்ட நிறைவு மட்டத்தை பெற்றிருக்கவில்லை. | - மேற்படி - | 02 செயற்பாடுகளுக்காக மீளாய்வாண்டின் போதியளவு கட்டுநிதி இல்லாமையால் 2019 ஆம் ஆண்டிற்கு கொண்டு செல்லப்பட்டதுடன் ஒரு செயற்பாட்டிற்கு காலம் போதியதாக இல்லா மையால் 2019 ஆம் ஆண்டிற்கு கொண்டு செல்லப்பட்டது |

**3.4 செயற்திட்டங்கள் நிறைவேற்றுவதில் தாமதம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| யாழ்ப்பாண மாவட்டத்தின் புதிய அலுவலக கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக மதிப்பிடு தயாரித்தல் மற்றும் கூறுவிலை கோரல் சிக்கலாக இருந்தமையால் பெறுகை இரத்துச் செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக செயற்திட்டத்தின் நிர்மாணம் தாமதித்திருந்தது. | திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 இல் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |

**3.5 காலதாமதத்தின் பின்னர் வேலை ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மட்டக்களப்பு மாவட்டத்தின் அலுவலக உத்தியோகபுர்வ இல்லம் நிர்மாணம் தொடர்பாக உத்தியோக விடுதியின் திட்டம் அவ்வவ்போது திருத்தம் செய்யப்பட்ட காரணத்தினால் குறித்த செயற்பாடு தாமதித்து ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக இச்செயற்பாட்டை மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்ய முடியாதிருந்தது. | திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 இன் இரண்டாம் காலாண்டில் வேலையை பூர்த்தி செய்யப்படுவதற்கு உள்ளது. |

**3.6 செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாமல் கைவிடல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தலைமை அலுவலகத்தின் முன்பக்க வேலி எல்லை மற்றும் உள்ளே செல்லும் கதவு மற்றும் பின்புறமான எல்லை வேலி திருத்த வேலை போன்ற 2 செயற்பாடுகள் மேற்கொள்ளப்படாமல் கைவிடப்பட்டிருந்தன. | திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்படுவதற்கு உள்ளது. |

**3.7 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16.2 ஆம் பிரிவின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கையை பரீட்சிப்பதற்காக 2018 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக ரூபா 3,401.89 மிலலியன் செலவினத்திற்குரிய செயலாற்றலைப் பரீட்சிக்க முடியாதிருந்தது. | செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். | செயலாற்றல் அறிக்கை தயாரித்தல் இறுதிக் கட்டத்தில் உள்ளது. |

**3.8 பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | கம்பஹா மாவட்ட தேர்தல் அலுவலகம் | | |
| (i) | வாக்கெடுப்பு செயற்பாட்டிற்காக சியனே கல்வி பயிற்சி கல்லூரியின் நிர்மாண நடவடிக்கைகளுக்காக ஒப்பந்தக்கார ரொருவருடன் முறையான ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.9 பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | அவதானிப்புடன் இணங்குகின்றேன். சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | வாக்கெடுப்பு செயற்பாட்டிற்காக மேசைகள் மற்றும் கதிரைகள் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளும் போது கேள்விதாரர் களுக்கு கேள்வி தயாரிப்பதற்கு போதியளவு காலம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டல் கோவையின் 6.2.2 வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சட்ட ரீதியான செயற்பாடொன்றின் போது பெறுகை வழிகாட்டல் கோவையின் 6.2.2 வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட முடியாதென தெதரிவிக்கப்பட்டிருந்தது சரி செய்வதற்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. |
| (iii) | கம்பஹா மாவட்ட வாக்குகளை எண்ணும் பிரதான வாக்கெண்ணும் நிலைய வளவில் தற்காலிமாக கூடாரங்களை நிர்மாணிக்கும் போது கேள்வி வழங்கும் கடிதத்தின் பிரகாரம் செயற்பாடு தொடர்பாக உடன்படிக்கையொன்று | கூறுவிலை கடிதத்தின் பிரகாரம் செயற்பாடுகள் தொடர்பாக உடன்படிக்கையொன்று மேற்கொள்ள முடியாது | அவதானிப்புடன் இணங்குகின்றேன். சரி செய்வதற்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (vi) | வாக்கெடுப்பு செயற்பாட்டிற்காக கட்டிட திருத்தங்களின் போது அச்செயற்பாட்டிற்குரிய ஆரம்ப மதிப்பிட்டிற்காக தலைமை அலுவலகத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2017 நவம்பர் 21 ஆந் திகதி வழங்கப்பட்ட S/7(1) ஆம் இலக்க உள்ளக சுற்றறிக்கையின் 1 ஆம் பந்தியின் பிரகாரம் கட்டிட திருத்தங்களின் போது ஆரம்ப மதிப்பிட்டிற்காக தலைமை அலுவலகத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். | அவதானிப்புடன் இணங்குகின்றேன். சரி செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| | <u>கண்டி மாவட்ட தேர்தல்கள் அலுவலகம்</u> | | |
| (v) | ரணபிம ரோயல் கல்லூரியை புதுப்பிப்பதற்காகவும் ரணபிம சனாதிபதி ரோயல் கல்லூரிக் அருகாமையில் ஹெக்டேயார் கொப்பேகடுவ வீதியின் ஒரு பகுதிக்கு கொங்கிரீட் இடுவதற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட பெறுகை செயற்பாட்டின் போது முறையான உடன்படிக்கையொன்றுக்கு வராதிருந்ததுடன் பெறுகை கோவைகள் முறைப்படி பேணப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.9 பந்தியின் பிரகாரம் முறையான உடன்படிக்கை யொன்றுக்கு வரவேண்டும் | உத்தியோகத்தர்கள் வேலைப்பளு காரணமாக கோவைகளை முறையாக பராமரிப்பதற்கு முடியாதிருந்தது. சரியாக நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது |
| (vi) | ரணபிம சனாதிபதி ரோயல் கல்லூரிக் அருகாமையில் ஹெக்டேயார் கொப்பேகடுவ வீதியின் ஒரு பகுதிக்கு கொங்கிரீட் இடுவதற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட பெறுகை செயற்பாட்டின் போது ஒப்பந்தக்காரருடன் விசாரித்து இனங்காணப்பட்ட விடயங்கள் தொடர்பான தகவல் கோவையில் காணப்படாதிருந்ததுடன் அது தொடர்பாக பெறுகை வழிகாட்டியின் 7.12.4 இன் பிரகாரம் புரிந்துணர்வு உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டியின் 7.12.4 இன் பிரகாரம் புரிந்துணர்வு உடன்படிக்கை எழுதி கைச்சாத்திடப்பட வேண்டும் | அவதானிப்புடன் இணங்குகின்றேன். சரி செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (vii) | பாடசாலையொன்றின் மலசலகூட முறைமையொன்றை திருத்தியமைக்கும் செயற்பாட்டிற்காக சந்தை ஒப்பிட்டு முறைமையின் கீழ் கேள்விதாரருக்கு கேள்வியை சமர்ப்பிப்பதற்கு போதியளவு காலமொன்று வழங்கப்படாதிருந்ததுடன் விசாரித்து இனங்காணப்பட்ட விடயங்கள் தொடர்பாக புரிந்துணர்வு உடன்படிக்கையும் | பெறுகை வழிகாட்டல் கோவையின் 6.2.2 வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அவதானிப்புடன் இணங்குகின்றேன். சரி செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (viii) | கண்டி மாவட்ட செயலகத்தின் முதலாவது மாடியின் விராந்தையின் செயற்பாடுகள் அனைத்தும் மேற்கொள்ளப்படாமல் இருந்ததுடன் சுவருக்கு சாந்து பூசுவதற்குரிய ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் தாமதக் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். | உடன்படிக்கையின் பிரகாரம் தாமதக் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டிய பெயர்களை தேடி உடன்படிக்கையின் பிரகாரம் தாமதக் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். சரி செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (ix) | கொழும்பு மாநகர தேர்தல் அலுவலக வாக்கெடுப்பு நடவடிக்கைகளுக்காக சமூகமளிக்கும் உத்தியோகத்தர்களுக்கு உணவு வழங்குவதற்கான தெரிவு செய்யப்பட்ட வழங்குனருடன் உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | 2016 சனவரி 27 ஆந் திகதிய LAE/2016/42 ஆம் இலக்க உள்ளக சுற்றறிக்கையின் 2.8.11 பந்தியின் பிரகாரம் உணவு வழங்கலுக்காக தெரிவு செய்யப்பட்ட வழங்குனருடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட வேண்டும். | அவதானிப்புடன் இணங்குகின்றேன். சரி செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (x) | தேர்தல்கள் ஆணைக்குழுவினால் 2018 பெப்ரவரி 10 ஆந் திகதி நடைபெற்ற உள்ளுராட்சி மன்ற வாக்கெடுப்பிற்காக பயன்படுத்துவதற்கு 55 டெப் இயந்திரங்கள் கொள்வனவு செய்வதற்காக 2018 சனவரி 25 ஆந் திகதி 06 நிறுவனங்களிலிருந்து கூறுவிலை சமர்ப்பிப்பதற்காக பெறுகை வழிகாட்டல் கோவையின் 6.2 இன் பிரகாரம் கேள்விதாரர்களுக்கு கேள்வி தயாரிப்பதற்கு போதியளவு காலம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டல் கோவையின் 6.2(ஈ) இன் பிரகாரம் கேள்விதாரர்களுக்கு கேள்வி தயாரிப்பதற்கு போதியளவு காலம் வழங்கப்பட வேண்டும். | அவதானிப்புடன் இணங்குகின்றேன். சரி செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

### 3.9 சொத்துக்கள் முகாமைத்துவம்

------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கண்டி மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தினால் வாக்கெடுப்பு நடைபெறும் நாளில் தமது அலுவலகத்தில் பயன்படுத்து வதற்காக கொள்வனவு செய்யப்பட்ட | நிதிப்பிரமாணம் 762 இன் பிரகாரம் அளவினை அதிகமாக இருப்புக்கள் களஞ்சியத்தில் வைக்காமல் இருப்பதற்கு | அவசர தேவைப்பாடு மற்றும் மின்சார சபையின் பரிந்துரையின் பேரில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |

| | | | |
|---|---|---|---|
| | 800 சார்ஜ் மின் விளக்குகளை 64 வாக்கென்னும் நிலையங்களுக்கு வழங்காமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன. | கவனம் செலுத்த வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | கொழும்பு மாவட்ட தேர்தல் அலுவலகத்தின் பயன்பாட்டிற்காக 2012 திசெம்பர் 29 ஆந் திகதி ரூபா 437,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட உருக்கு அலுமாரிகள் மாவட்ட செயலகத்திற்கு கையளிக்கப்படாமல் தலைமை அலுவலகத்தின் களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டன. | பெறுகை வழிகாட்டல் கோவையின் 1.2.1(அ) இன் பிரகாரம் உரிய காலத்தில் பெறுகை செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக உறுதிப்படுத்தப்பட வேண்டும். | அச்சந்தர்ப்பம் வரை கொழும்பு மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் போதியளவு இட வசதிகள் இல்லாமை காரணமாக அந்த அலுவலகத்தை புதிய கட்டிடத்திற்கு செல்லும் வரை தலைமை அலுவலகத்தின் களஞ்சியத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.10 முகாமைத்துவ பலவீனங்கள்**

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 உள்ளூராட்சி மன்ற நிறுவன வாக்கெடுப்புக்குரிய கொழும்பு போக்குவரத்து குழுவிற்கு வழங்கப்பட்ட ரூபா 20,000 ஆன துணைக் கட்டுநிதி இக்குழுவினால் பெற்றுக் கொள்ளப்படாதிருந்ததுடன் அத்தொகை 04 மாதங்கள் வங்கியிலிடாமல் நிறுவனத்தில் வைக்கப்பட்டிருந்தது. | முறையான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று ஊடாக முற்பணத்தை வழங்குதல் மற்றும் தீர்வு செய்தல் தொடர்பாக கட்டுப்பாடொன்று பேணப்பட வேண்டும். | அவதானிப்புடன் இணங்குகின்றேன். இதன் பின்னர் இவ்வாறான நடவடிக்கைகளிலிருந்து தவிர்க்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | ஆணைக்குழுவினால் 2017 ஆம் ஆண்டின் போது கைதவிர்ப்பதற்கு பொருத்தமானதென இனங்காணப்பட்ட 02 வாகனங்களுக்காக கைதவிர்ப்புக் குழுவின் பரிந்துரைகளை வழங்குவதற்கு 08 மாதங்களுக்கு மேல் கடந்திருந்தன. | 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு ஆண்டிலும் இச்சுற்றறிக்கை யின் பிரகாரம் கைதவிர்ப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன் அதன் போது கைதவிர்க்கப்பட்ட வேண்டிய வாகனங்கள் அது | கைதவிர்ப்புக் குழு உத்தியோகத்தர்கள் மாவட்டத்திற்கு வெளியே அறிவூட்டுதல் பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு சமுகமளித்தல் மற்றும் 2018 ஆம் ஆண்டின் உள்ளூராட்சி மன்ற வாக்கெடுப்பு காரணமாக உத்தியோகத்தர்கள் வேலைப்பழு மற்றும் தொழில்நுட்ப அறிவுள்ள உத்தியோகத்தர் ஒருவர் அழைப்பதில் உள்ள சிக்கல் காரணமாக |

| | | |
|---|---|---|
| | தொடர்பான தகவல்களுக்குரிய ஆண்டின் 31 ஆந் திகதிக்கு முன்னர் கைதவிர்ப்பு செயற்பாட்டினை பூர்த்தி செய்ததன் பின்னர் இது தொடர்பாக தகவல் உரிய ஆண்டின் யூன் 30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் குறித்துரைக்கப்பட்ட மாதிரியின் பிரகாரம் தயாரித்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். | தாமதமாகியிருந்தது. 2019 ஆம் ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 4.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக தேர்தல்கள் ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டிருந்த தந்திரோபாய திட்டத்தில் சகல மாவட்டங்களுக்காக 2018 ஆம் ஆண்டிற்குரிய செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் கம்பஹா மற்றும் கண்டி மாவட்ட அலுவலகங்களினால் மீளாய்வாண்டின் போது சில செயற்பாடுகள் நிறைவேற்றப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | திட்டமிடப்பட்டதன் பிரகாரம் நுடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. |